திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் இ.பெரியசாமி, மேற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரையாற்றினர். கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த

சென்னையைச் சேர்ந்த ஐவரின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, செப்.11-

சென்னையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் தஞ்சாவூர் மாவட்டம் கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை, எழும்பூர், நேருபூங்கா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்கள், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி பூண்டி மாதா கோவிலுக்கு சென்றுவிட்டு 8.9.2024 அன்று முற்பகல் திருச்சி செங்கரையூர் கொள்ளிடம் ஆற்றுப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கிய போது, கிஷோர் (வயது 20) த/பெ. ஜியாவுதீன்; கலை வேந்தன் (வயது 19) த/பெ.சண்முகம்; ஆண்டோ (வயது 21) த/பெ.சார்லஸ்; பிராங்கிளின் (வயது 23) த/பெ.சார்லஸ்; மனோகர் (வயது 19) த/பெ.வெங்கடேசன் ஆகிய ஐந்து நபர்கள் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். .

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

சிவகங்கை ஒன்றியக் குழுத் தலைவர்

மஞ்சுளா பாலச்சந்தர் இல்ல மணவிழா!

அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்தார்!

சிவகங்கை, செப். 11-

சிவகங்கை ஒன்றியக்குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலசுந்தர் ப.பாலசந்தர் ஆகியோரின் மகன் பொறியாளர் பா. ஹரி பிரசாத் மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா புலி மலைப்பட்டி பாண்டி செல்வம் அனிதா மகள் பொறியாளர் பா.சங்கீதாஆகியோரின்திருமணம் கே.உசிலம்பட்டியில் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

திருமணத்தினை கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழிகருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக் குமார் எம் . எல்.ஏ. சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், ஊராட்சி மன்ற தலைவர் பெ.மந்தக்காளை, ஒன்றிய செயலாளர்கள் திருமலைமுத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,அமைப்பாளர் சிங்கமுத்து ஒன்றிய,நகர், பேரூர் கழக நிர்வாகிகள் அர்ஜுனன், ராமமூர்த்தி, சோமசுந்தரம், மாரி,தொ.மு.ச. முருகேசன், காஜா முகைதீன், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் முத்துராமலிங்கம், உட்பட ஒன்றிய, நகர,பேரூர் நிர்வாகிகள், அனைத்து கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருமண விழா ஏற்பாடுகளை பா. பாலச்சந்தர், திருமதி மஞ்சுளா பாலச்சந்தர், பாரதி பிரசாத் ஆகியோர் செய்திருந்தனர்.

2026 சட்டமன்றத் தேர்தலில் நூற்றுக்கு நூறு சதவீதம் வெற்றி பெற்று

முதல்வராக மு.க.ஸ்டாலினை மீண்டும் அரியணையேற்றுவோம்!

திண்டுக்கல் மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

திண்டுக்கல், செப்.11

திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம், திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர்கள் காமாட்சி, மோகன் தலைமை தாங்கினர். சிறப்பு விருந்தினராக கழக துணைப்பொதுச் செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி, மேற்கு மாவட்ட செயலாளர்,அமைச்சர் அர. சக்கரபாணி கிழக்கு மாவட்ட செயலாளர் இபெ.செந்தில் குமார் எம். எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினர்.மாநகர செயலாளர் ராஜப்பா அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பேசுகையில், “கடந்த நாடாளுமன்ற தேர்த லில் நிலக்கோட்டை தொகுதியில் கழகத்திற்கு அதிக வாக்குகள் கிடைத்தது. அதே போல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 7 தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் கழகம்வெற்றி பெற தொண்டர்கள், நிர்வாகிகள் களப்பணியாற்ற வேண்டும்” என்றார்.

அமைச்சர் அர.சக்கரபாணி பேசும் போது, “

சட்டமன்ற தேர்தலில் வாக்கு சதவீதம் அதிகரிக்க செய்ய கட்சி நிர்வாகிகள் , தொண்டர்கள் கருத்து வேறுபாடு இன்றி இணைந்து செயல்பட வேண்டும் நாம் செயல்படுத்திய நலத்திட்டங்கள் குறித்து மக்களிடம் கொண்டு செல்ல சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தாலே நாம் அமோக வெற்றி பெற முடியும்.என்றார்.

இதில், மாவட்ட துணை செயலாளர்கள் ராஜாமணி, நாகராஜன், மார்க்கரெட் மேரி, பிலால் உசேன் பொருளாளர்கள் சத்திய மூர்த்தி, விஜயன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ஜெயன் ,மேயர் இளமதி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன், நகரச் செயலாளர்கள் வெள்ளைச்சாமி, முகமது இப்ராகிம், வேலுமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன், ஹரிஹரசுதன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை உள்பட மாநகர ஒன்றிய பேரூர், பகுதி கழக நிர்வாகிகள் சார்புஅணி நிர்வாகிகள் உட்பட திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இந்திய துணைப் பெரும் கண்டமே பாராட்டும் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் சாதனை திட்டங்களான காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, கலைஞர் கனவு இல்லம், விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற அரிய திட்டங்களை தந்து நன் மதிப்பை பெற்று நாடாளுமன்றத் தேர்தலில் 40/40 வெற்றிக்கு வழிவகுத்த கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு பாராட்டுகளை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

கழக இளைஞர் அணி செயலாளராக பொறுப்புறேற்று, தமிழ்நாடு முழுவதும் பயிற்சிப் பாசறை, இளைஞர் அணியின் இரண்டாவது எழுச்சி மாநாடு, 40 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப் பயணம், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள், சென்னையில் சர்வதேச தரத்தில் கார் ரேஸ் உள்ளிட்டவைகளை நடத்தி இளைஞர்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்கிட இக்கூட்டம் வேண்டுகோளை முன்வைக்கிறது.

செப்டம்பர் 15 பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளை வெகு சிறப்பாக கொண்டாடுவது, செப்டம்பர் 16 கழகம் தோற்றுவித்த நாள், செப்டம்பர் 17 சமத்துவ பெரியார் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடுவது, மற்றும் சென்னையில் செம்டம்பர் 17ஆம் தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கில் பெருந்திரளாக கலந்து கொள்வது எனவும்,

கழக பவள விழாவினை முன்னிட்டு அனைத்து கொடிக்கம்பங்களையும் மராமத்து செய்து புதுப்பித்து புதிய கொடிகளை கழகமுன்னோடிகளை வைத்து கொடியேற்றி கொண்டாடுவது என்றும்,

2026ல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் 100 க்கு 100 சதவீதம் வெற்றி பெற்று கழக ஆட்சியினை மீண்டும் அரியணை ஏற்றவது எனவும், திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்களில் நிரப்பப்பட வேண்டிய பொறுப்புகள் அனைத்தும் உடனடியாக நிரப்ப வேண்டும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்களில் நியமிக்கவேண்டிய அனைத்து சார்பு அணிகளும் நியமிக்கப்பட்டு உடனடியாக மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும்

கழக முப்பெரும் விழாவினை முன்னிட்டு சுவர் விளம்பரங்களை தாய் கழகம் மற்றும் சார்பு அணியினர் செய்யவேண்டும். தொடர்ந்து தலைவர் பிறந்த நாள் விழா, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா என தொடர்ச்சியாக 2026 சட்டமன்றத் தேர்தல் வரை சுவர் விளம்பரங்களை செய்து அந்த இடங்களை நமது கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் என்றும்,

அரசின் சாதனைகளை குறிப்பிட்டும் அனைத்து இடங்களில் சுவர் விளம்பரங்கள் செய்வது என்றும்,

புதிதாக வழங்கப்பட்ட உறுப்பினர் அட்டைகளை அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டதற்கான இன்வாய்ஸ் மற்றும் கிளை நடவடிக்கை கையேடுகளில் கையெழுத்து பெறப்பட்டதற்கான நகல் போன்றவற்றை மாவட்ட கழகத்தில் விரைவில் ஒப்படைக்கவேண்டும் என்றும்,

வரும் காலங்களில் தொடர்ந்து மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு மற்றும் கிளைக் கழகக் கூட்டங்களை நடத்துவது என்றும், மாவட்டத்தில் கழக கொடி கம்பங்கள் எந்தெந்த பகுதி, கிளை, வார்டுகளில் இல்லை என்கிற விபரத்தை உடனே தெரிவித்திட உள்ளிட்ட தீர்னமாங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

சிவகங்கை மாவட்ட ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர் ப.பாலச்சந்தர் – ஆகியோரின் மகன் பொறியாளர் பா.ஹரி பிரசாத் மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா புலிமலைப்பட்டி க. பாண்டி செல்வம்அம்பலம் – அனிதா ஆகியோரின்புதல்வி பொறியாளர் பா சந்தியா ஆகியோரது திருமணத்தினை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர் .பெரியகருப்பன் தலைமையில் மாநில கழக துணை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி .நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மற்றும் மணமக்கள் வீட்டார்கள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மதுரை விமான நிலையத்தில் – மாவட்ட தி.மு.க. சார்பில்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் கோ.தளபதி எம்.எல்.ஏ.-

சேடப்பட்டி மு.மணிமாறன் முன்னிலையில் ஏராளமானோர் பங்கேற்பு !

மதுரை, செப்.11-

மதுரை மாவட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சிக்காக விமான மூலம் மதுரை வந்த இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணி மாறன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு கொடுத்தனர். அதன் விபரம்,

கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்ருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை யா.ஒத்தக்கடையில்பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழாவில் பங்கேற்று தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூபாய் 2500 கோடி கடன் உதவி வழங்குதல், மதுரை மாவட்டத்தில் 11,500 நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குதல், 500 புதிய சுய உதவி குழுக்களை சேர்ந்த 6000 மகளிர்க்கு கடனுதவி வழங்குதல் மற்றும் 2000 புதிய குடும்ப அட்டை வழங்குதல் உள்ளிட்ட சுமார் 300 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்த விழாக்களில் பங்கேற்பதற்காக விமான மூலம் மதுரை வந்த கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையிலும், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணி மாறன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தினர் கையில் இரு வண்ண கொடியேந்தி உற்சாக மிகுந்த வரவேற்பு கோஷங்களை முழங்கி வரவேற்பு கொடுத்தனர்.

இந்த சிறப்புமிக்க வரவேற்பு நிகழ்வில் மதுரை வடக்கு மாவட்டம், மதுரை மாநகர் மாவட்டம் மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என ஏராளமானோர் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

கழகத்தினர் கொடுத்த உற்சாக வரவேற்பினை இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு!

அமைச்சர் பெரிய கருப்பன் தலைமையில்!

சிவகங்கை, செப். 11-

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இன்று 11ம் தேதி கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசின் சார்பில் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனார் நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் முதல்வர் சார்பில் மரியாதை செலுத்துவதற்கு செல்கிறார்.

மதுரையிலிருந்து கார் மூலம் பரமக்குடி செல்லும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட எல்கையான திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் காலை 8.00 மணி அளவில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு தாரை வார்த்து

இந்திய நிதி இறையாண்மையின் அடித்தளத்தை தகர்க்கும் மோடி அரசு!

‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கடும் கண்டனம்!

சென்னை, செப்.11-

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு தாரை வார்த்து, இந்தியநிதிஇறையாண்மையின் அடித்தளத்தை தகர்க்கிறது மோடி அரசு என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 10.09.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

மோடி அரசு உலகளவில் தனது நிதி இறையாண்மையை நிலைநாட்டும் பொருட்டு ‘செல்வ இறையாண்மை நிதியத்தை’ உருவாக்க முடிவு செய்துள்ளது. அதற்காக நாட்டின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளையும், சொத்துக்களையும்விற்று நிதி திரட்டுவது என்ற மிக ஆபத்தான பாதையை தேர்வு செய்துள்ளது. கண்ணை விற்று சித்திரம் வாங்குவது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் இது.

உலக முதலாளித்து வத்தின் நெருக்கடி எவ்விதத் தீர்வும் இல்லாமல் நாடுகளை அதிதீவிர நெருக்கடிகளின் பிடியில் சிக்கச் செய்கிறது. இந்தப் பின்னணியில் பல நாடுகள் தங்களது நிதி இறையாண்மையை உறுதி செய்வதற்காக அதாவது, எந்தச் சூழலிலும் திவால் ஆகிவிடாமல் நிதி ரீதியாக வலுவாக நிலைநாட்டிக் கொள்வ தற்காக வலுவான செல்வ ஆதாரங்கள் கொண்ட நிதியத்தை உருவாக்கி பேணி வருகின்றன. குறிப்பாக சீனா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் உள்பட 40 நாடுகள் இத்தகைய நிதியத்தை சமீப காலத்தில் உருவாக்கி வலுப்படுத்திக் கொண்டுள்ளன. இந்தியாவில் இதுவரை அப்படி ஒரு நிதியம் இல்லை. உலகளாவிய பல்வேறு வகையான நெருக்கடிகள் முற்றி வரும் நிலையில், இத்தகைய ஒரு நிதியத்தை உருவாக்கிக் கொள்ள ஒன்றிய அரசு திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தீக்கதிர்

2024 செப்.10 செவ்வாய்க்கிழமை

இறையாண்மையின் அடித்தளம்

மோடி அரசு உலகளவில் தனது நிதி இறையாண்மையை நிலைநாட்டும் பொருட்டு ‘செல்வ இறையாண்மை நிதியத்தை’ உருவாக்க முடிவு செய்துள்ளது. அதற்காக நாட்டின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளையும், சொத்துக்களையும் விற்று நிதி திரட்டுவது என்ற மிக ஆபத்தான பாதையை தேர்வு செய்துள்ளது. கண்ணை விற்று சித்திரம் வாங்குவது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் இது.

உலக முதலாளித்துவத்தின் நெருக்கடி எவ்விதத் தீர்வும் இல்லாமல் நாடுகளை அதிதீவிர நெருக்கடிகளின் பிடியில் சிக்கச் செய்கிறது. இந்தப் பின்னணியில் பல நாடுகள் தங்களது நிதி இறையாண்மையை உறுதி செய்வதற்காக - அதாவது, எந்தச் சூழலிலும் திவால் ஆகிவிடாமல் நிதி ரீதியாக வலுவாக நிலைநாட்டிக் கொள்வ தற்காக - வலுவான செல்வ ஆதாரங்கள் கொண்ட நிதியத்தை உருவாக்கி பேணி வருகின்றன.

ஆனால் இதில் அதிர்ச்சிகரமான அம்சம் என்னவெனில், ஒன்றிய அரசுக்கு சொந்தமான 48 பொதுத்துறை நிறுவனங்களில், அரசுக்கு சொந்தமான பங்குகளை கணிசமாக விற்று அதன்மூலம் 50 லட்சம் கோடி ரூபாயை திரட்டுவது என மோடி அரசு திட்டமிட்டு வருவதாக வெளியாகியுள்ள தகவல்தான்.

இப்படி திரட்டப்படும் நிதியைக் கொண்டு இந்திய இறையாண்மை நிதியத்தை உருவாக்கி, அதை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முதலீடு செய்து பொருளாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம் என ஒன்றிய அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

உலகப் பெரும் முதலாளிகளின் லாபவேட்கைக்கு சேவை செய்யும் விதத்தில் நவீன தாராளமயக் கொள்கைகளை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ள மோடி அரசு தனது ஆட்சிக் காலம் முழுவதிலும் பொதுத்துறை நிறுவனங்களை பலவீனப்படுத்துவது, தனியார்மயமாக்குவது, எஞ்சியுள்ள பங்குகளையும் விற்றுத் தீர்ப்பது, அவற்றின் சொத்துக்களை எல்லாம் பெரும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மடை மாற்றுவது என முற்றிலும் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதை தடுத்து நிறுத்த தொழிற் சங்கங்களும், தொழிலாளர் வர்க்கமும் வலுவான போராட்டங்களை நடத்திய வண்ணம் உள்ளன. ஆனால் எதற்கும் செவி சாய்க்காத மோடி அரசு, தற்போது ஒட்டுமொத்த பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு வாரி வழங்குவது என ஆலோசித்திருப்பது மிக மிக ஆபத்தானது. இந்த பொதுத்துறை நிறுவனங்கள் தான் இந்திய நிதி இறையாண்மையின் அடித்தளங்கள் என்பதை மறந்து அவற்றை தகர்க்கப் பார்க்கிறது மோடி அரசு.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.